நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No. 116/2025

## P.W. 4 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி / புகார்தாரர் தரப்பு / குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பு / நீதிமன்ற சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | மாரிமுத்து |
| தந்தை / கணவர் பெயர் | : | குப்பண்ண கவுண்டர் |
| கிராமம் | : | ஐயம்புதூர் |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW4** |
| வயது | : | 65 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், ஜுலை மாதம், 28–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரிகள் ஆஜரில் இல்லை. அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**(இன்று கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் விடுமுறையில் உள்ளதாலும், சாட்சி ஆஜரில் இருப்பதை கருத்தில் கொண்டும், நீதிமன்றம் தாமாக சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்கிறது.)**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:–12.40PM)

1. நான் அய்யம்புதூரில் குடியிருந்து கூலிவேலை செய்து வருகிறேன். சுமார் 6 மாதத்திற்கு முன்பாக எனது மாமா அ.சா.2 கோவிந்தசாமியை கடத்தி விட்டதாக எனது மாமாவின் அண்ணன் மருமகள் சுமதி என்பவர் எனக்கு போன் செய்து தகவல் சொன்னார். தகவல் அறிந்து கடத்தப்பட்டட இடமான காட்டுக்கொட்டாய் பகுதிக்கு நானும், சேமலை என்பவரும் காலை 10.00 மணி சுமாருக்கு சென்றோம்.

2. எனக்கு தகவல் வரும்போது காலை 09.00 மணியிருக்கும். நான் சம்பவயிடத்திற்கு போகும்போது சுமதி, சுமதியின் கணவர் குமார், பொன்னம்மாள், பழனிசாமி, மற்றும் நிறைய நபர்கள் அங்கிருந்தார்கள். போலீசாரும் அங்கிருந்தார்கள். போலீசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர்மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துக்கொண்டிருந்தார்கள்.

3. அதற்கு சாட்சியாக இருக்க கேட்டதால் நானும், சேமலை என்பவரும் சாட்சி கையெழுத்து செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். **பார்வை மகசர் அசாஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

4. சம்பவத்திற்கு மறுநாள் என்னை காவல் நிலையம் அழைத்து விசாரணை செய்தார்கள். நான் சம்பவம் நடந்த முடிந்த பின்னர் தான் சம்பவயிடத்திற்கு போனேன். நான் எதுவும் நேரில் பார்க்கவில்லை. நான் சம்பவத்தை நேரில் பார்த்ததாக காவல் நிலையத்தில் சொல்லவில்லை. நான் கையெழுத்து போட்ட ஆவணங்களில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது.

5. நான் சம்பவம் இடத்திற்கு சென்றதும் கொஞ்ச நேரத்தில் போலீசார் அங்கு வந்துவிட்டார்கள். நாங்கள் இருவரும் முக்கியமான நபர்கள் என்பதாலும், சாட்சி சொல்ல முன்வந்ததாலும் எங்களிடம் போலீசார் கையெழுத்து வாங்கிக்கொண்டார்கள். அதன் பின்னிட்டு இந்த வழக்கு சம்மந்தமாக என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–(12.50PM)

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**

நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

**C.C. No. 116/2025**

**P.W.5 –ன் வாக்குமூலம்**

**(அரசுதரப்பு சாட்சி / புகார்தாரர் தரப்பு / குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பு / நீதிமன்ற சாட்சி)**

............

| | | |
|---|---|---|
| பெயர் | : | சேமலை |
| தந்தை / கணவர் பெயர் | : | குப்பண்ண கவுண்டர் |
| கிராமம் | : | ஏரிக்காடு |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW5** |
| வயது | : | 68 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், ஜுலை மாதம், 28–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரிகள் ஆஜரில் இல்லை. அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**(இன்று கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் விடுமுறையில் உள்ளதாலும், சாட்சி ஆஜரில் இருப்பதை கருத்தில் கொண்டும், நீதிமன்றம் தாமாக சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்கிறது.)**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:–12.52PM)

1. நான் ஏரிக்காட்டில் குடியிருக்கிறேன். தற்போது இந்நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்த மாரிமுத்து எனக்கு தம்பி முறை ஆவார். சுமார் 6 மாதத்திற்கு முன்பு ஒருநாள் அ.சா.4 மாரிமுத்து எனக்கு போன் செய்து எனது சகலை அ.சா.2 கோவிந்தசாமியை யாரோ கடத்திச்செல்கிறார்கள் என்று மாலை 04.00 மணிக்கு போன் செய்து எனக்கு தகவல் சொன்னார்.

2. நான் அப்போது எனது தோட்டத்தில் இருந்தேன். கடத்தப்பட்டவுடன் எனது தம்பி அ.சா.4 மாரிமுத்து எனக்கு போன் செய்துவிட்டார். ஆகவே நான் வண்டி பதிவெண்ணை குறித்து வைத்துக்கொள்ள சொன்னேன். அ.சா.4 மாரிமுத்து சம்பவயிடத்தில் இருந்து தான் எனக்கு போன் செய்தார். அவரும் மற்ற நபர்களும் கடத்திச்சென்ற வண்டியை வழிமறித்ததாகவும், ஆனால் நிற்காமல் சென்றுவிட்டதாகவும் எனக்கு தகவல் சொன்னார்.

3. நான் அவர்களை காவல்நிலையம் வரச்சொல்லிவிட்டு நான் உடனே கிளம்பி நானும் கொளத்தூர் காவல் நிலையம் சென்றேன். எனக்கு முன்பாகவே அ.சா.4 மாரிமுத்து மற்றும் அவரது உறவினர்கள் அங்கு வந்திருந்தார்கள். உதவி ஆய்வாளருக்கு வாகனத்தின் பதிவெண்ணை கொடுத்து அ.சா.2 கோவிந்தசாமியின் அண்ணன் மகன் குமார் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். அ.சா.4 மாரிமுத்து அங்கிருந்தார்.

4. புகார் கொடுத்ததும், கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட வண்டியை போலீசார் பிடித்துக்கொண்டு காவல் நிலையம் கொண்டு வந்துவிட்டார்கள். அந்த வண்டியில் எனது சகலை கோவிந்தசாமி மற்றும் கடத்தி சென்ற 3 நபர்கள் இருந்தார்கள். அந்த 3 நபர்களை என்னால் பார்த்தால் அடையாளம் சொல்லமுடியும். அவர்களுடைய பெயர்கள் தெரியாது.

5. அந்த 3 நபர்களை அதற்கு முன்னால் எனக்கு தெரியாது. நாங்கள் புகார் கொடுக்கும்போது மாலை 06.00 மணியிருக்கும். போலீசார் இரவு 08.00 மணிக்கு சம்பவயிடம் வந்து என்ன நடந்தது என்று விசாரித்தார்கள். போலீசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்தார்கள். என்னிடம் அதற்காக சாட்சி கையெழுத்து வாங்கினார்கள்.

6. நான் அதன்பிறகு அ.சா.4 மாரிமுத்துவை சம்பவயிடத்திற்கு வரச்சொல்லி அவரும் மேற்படி ஆவணத்தில் சாட்சி கையெழுத்து போட்டார். அ.சா.4 மாரிமுத்து கையெழுத்து போடும்போது இரவு 08.30 மணியிருக்கும். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரிலுள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான். ( **மேற்படி பார்வை மகசர் அசாஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுளள்து.)**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

7. மேற்படி சம்பவயிடத்தில் வைத்து என்னிடம் கையெழுத்து வாங்கும்போதுதான் என்னை விசாரித்தார்கள். அதன்பிறகு என்னை விசாரிக்கவில்லை. காவல் துறையினர் என்னை விசாரிக்கும்போது அ.சா.4 மாரிமுத்து போன் செய்து எனக்கு தகவல் சொன்ன பின்னிட்டுத்தான் எனக்கு சம்பவம் நடந்த விவரம் தெரியும் என்று சொன்னேன்.

8. அ.சா.4 மாரிமுத்துவிடம் வாகன பதிவெண்ணை குறித்துவைத்துக்கொள்ள சொன்னேன் என்று காவல் துறை விசாரணையிலும் சொன்னேன். அ.சா.4 மாரிமுத்து சம்பவயிடத்தில் இருந்துதான் எனக்கு போன் செய்தார் என்று நான் காவல் துறை விசாரணையில் சொல்லவில்லை. சம்பவயிடத்தில் வைத்து காவல்துறையினர் என்னை விசாரிக்கும்போது தகவல் அறிந்து நானும், எனது தம்பி மாரிமுத்தும் காவல் நிலையம் சென்றது பற்றியும், அங்கு புகார் கொடுத்தது பற்றியும் சொன்னேன்.

9. காவல் துறை விசாரணையில் மேற்படி நான் காவல் நிலையத்தில் இருக்கும்போது எனது சகலையுடன் 3 நபர்கள் கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட காரில் இருந்தார்கள் என்றும், அவர்களை எனக்கு அடையாளம் தெரியும் என்றும் சொன்னேன். **(மேற்படி சாட்சி தெரிவித்த 3 நபர்கள் தனக்கு ஏற்கனவே அறிமுகம் நபர்கள் அல்ல என்றும், அவர்களை பார்த்தால் எனக்கு அடையாளம் தெரியும் என்றும் தெரிவித்துள்ளதாலும் இன்று இந்த வழக்கில் எதிரிகள் யாரும் ஆஜரில் இல்லாததாலும் மேற்படி 3 நபர்களை அடையாளம் காணும் பொருட்டு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிக்காக இந்த வழக்குஒத்திவைக்கப்படுகிறது.)**

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–(01.10 PM)

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**